**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF -CUM-JUDICIAL MAGISTRATE,
KILPENNATHUR.

| | |
|---|---|
| Calender | Case No. : CC 120/2024 (4/2013) |
| Deposition of witness for | Prosecution : LW 2 as PW 2 |
| | Defence : |
| | Court : |
| Name : அதாவுல்லா | Father's Name: பாஷா சாகிப் |
| | Husband Name: |
| Village: | Taluk : |
| Caste : | Calling : |
| Religion: | Age : 64 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 01.09.2025

**1ம் எதிரி ஆஜர். 2, 3 எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது ஆவூர் கிராமத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 ஜகாங்கீர் எனது மைத்துனர் ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். எதிரிகள் ஆனந்த் மற்றும் சின்னப்பராஜ் ஆகியோர்களை தெரியும். கடந்த 24.03.2011ம் தேதி மதியம் 1 மணிக்கு நானும் ஜாப்பரும் என்னுடைய விவசாய நிலத்திற்கு பார்த்துவர சென்றோம். என்னுடைய மாமனார் நிலத்தில் எதிரிகள் தேங்காய், மாங்காய் ஆகிவற்றை பறித்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அதை எனது மைத்துனர் ஜகாங்கீர் எதிரிகளிடம் கேட்டார். எதிரிகள் என் மைத்துனரை அடித்துவிட்டனர். விமல் எனது மைத்துனரை கையால் மூக்கில் குத்தினார். ஆனந்த் எனது மைத்துனரை மார்பில் கையால் அடித்தார். சின்னப்பராஜ் எனது மைத்துனரை மார்பில் அடித்தார். சின்னப்பராஜ் என் மைத்துனரை கொடுவாளால் வலது கை நடுவிரலில் வெட்டினார். தட்டிக்கேட்ட என்னை விமல் மற்றும் ஆனந்த் ஆகிய இருவரும் சேர்ந்து என்னை நெற்றி, மூக்கில் அடித்தார்கள். ஆனந்த் என் முன் பக்க நெற்றியில்

பிளேடால் கிழித்துவிட்டார். என் பாக்கெட்டில் இருந்த ரூ. 5400/—யை எதிரிகள் எடுத்துக்கொண்டனர். அடிப்பட்ட நானும், ஜகாங்கீரும் காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்துவிட்டு திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டோம். புகாரை எனது மைத்துனர் கொடுத்தார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/-(M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்